Australian Tamil Broadcasting Corporation
P O Box 4787, North Rocks, NSW 2151, Australia
Phone: 02 9688 3188 http://www.atbc.net.au Fax: 02 9688 3488

# அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## வானொலி நிலையம்

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினது வானொலி நிலையம் தினம் தோறும் 24 மணி நேரம் அடிப்படையாக தமிழில் ஒலிபரப்பினை நடாத்தி வருகின்றது. அவுஸ்திரேலியாவுக்கு தமிழர்கள் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து குடியேறி வாழ்கின்றார்கள். சிட்னி பெரு நகராண்மைப் பகுதிக்குள் அண்ணளவாக 35,000 தமிழர்களும் அவுஸ்திரேலியா முழுவதிலும் 80,000க்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் அவுஸ்திரேலியாவில் குடியேறிய முதலாவது அல்லது இரண்டாவது தலை முறையினர் ஆவர்.

சமூகத்தினது குரலைப் பிரதிபலிக்கும் வகையில் அவுஸ்திரேலியாவில் சமூக ஒலிபரப்பு விளங்குகின்றது. அவுஸ்திரேலியாவில் ஏற்கனவே உள்ள தகவல் ஊடகங்களால் போதுமான அளவு வழங்கப்படாத தகவல்களை அவுஸ்திரேலிய தமிழ் மக்களுக்கு வழங்கும் நோக்குடனேயே அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது. அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இலாப நோக்கற்ற ஒரு அமைப்பாக தமிழ் சமூகத்தினது பங்களிப்புடன் இயங்குகின்றது. அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ் சமூகத்தில் திறனும், ஆற்றலும் வாய்ந்த வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு வழிமுறைகளையும் வாய்ப்பினையும் வழங்குகின்றது.

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அவுஸ்திரேலியாவில் உள்ள சமூக அமைப்பு ஒலிபரப்பு நிறுவனங்களின் ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிப்பதுடன் அவர்கள் விதித்துள்ள நடைமுறை விதிகளையும் பின்பற்றுகின்றது. இவ் நடைமுறை விதிகளின் படி அவுஸ்திரேலிய ஒலிபரப்பு அதிகார சபையினால் சமூகத்தினது கவனத்தை ஈர்க்கும் எனக் குறிப்பிப்பட்டுளள விடயங்களில் பொது மக்களை தவறாக வழி நடத்தக்கூடிய செய்திகளை, நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதை கட்டுப்படுத்துகின்றது.

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினது நிர்வாகக் குழு இவ் நடைமுறை விதிகளை பின்பற்றுவதை உறுதிப் படுத்தும் வகையில் ஒரு நிர்வாக ஆலோசனைக் குழு அமைக்கப் பட்டுள்ளது. மேலும் இவ் நிர்வாக ஆலோசனைக் குழு அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இலாப நோக்கற்ற முறையில் இயங்குகின்றது என்பதை உறுதிப்படுத்தும் அதிகாரத்தையும் கொண்டுள்ளது.

## வானொலி நிகழ்ச்சி வகைகள்

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அனைத்துலக வானொலி நிலையங்களுடனும் அவர்களது நிகழ்ச்சிகளை மீள் ஒலிபரப்புச் செய்வதற்கு இணங்கிவருகின்றது. இவற்றில் லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் பீ.பீ.சி தமிழோசை, பீ.பீ.சி ஆங்கில உலக சேவை, கனடாவில் இருந்து ஒலிபரப்பாகும் சி.ரி.ஆர் வானொலி, ஜேர்மனியில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் வெப் ரேடியோ குறிப்பிடத் தக்கவையாகும்.

அவுஸ்திரேலியாவில் அரசவானொலியான SBS வானொலியின் தமிழ் நிகழ்ச்சிகள், சிட்னியின் முதல் தமிழ் வானொலியான தமிழ் முழக்கத்தின் நிகழ்ச்சிகள் என்பனவும் எமது வானொலியில் நேரடியாக அஞ்சல் செய்யப்படுகின்றன.

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல வேறுபட்ட நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குகின்றது. இளைய தலைமுறையினர், சிரேஸ்ட குடிமக்கள், பெண்கள், அவுஸ்திரேலியாவுக்கு புதிதாக குடியேறியவர்கள் போன்ற பலவகைப்பட்டவர்களின் தேவை கருதி அவர்களது நிகழ்ச்சிகளுக்கு தனியாக நேரம் ஒதுக்கப் பட்டுள்ளது. பெரும்பாலன நிகழ்ச்சிகள், இசை வடிவங்கள் தமிழ் மொழியிலேயே உள்ள போதும், அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆங்கிலத்தில் நிகழ்ச்சிகளைத் தயாரித்தும் மறு ஒலிபரப்புச் செய்தும் வருகின்றது.